***கவனிக்க*** *.- 08.08.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி* II *மற்றும் பகுதி* IV *(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1824 - 2013 අගෝස්තු මස 16 වැනි සිකුරාදා - 2013.08.16**

*1824 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# *பகுதி* IV*(அ) - மாகாண சபைகள்*

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 1742 | நானாவித அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | | - |
| பதவிகள் - வெற்றிடம் | - | | |


***கவனிக்க.*** *- இவ்வர்த்தமானியின் பகுதி* V *இல் அச்சீட்டாளர்கள் மற்றும் வெளியீட்டாளர்கள் சட்டத்தின்கீழ் 2011 ஆம் ஆண்டின் காலாண்டிற்கான (சனவரி-மாச்சு) புத்தகப் பெயர்ப்பட்டியலொன்று ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்படுகின்றது.*


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2013, செத்தெம்பர் மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, ஓகத்து மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டி சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# மாகாண சபை அறிவித்தல்கள்

## மேல் மாகாண மாகாண சபை

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 123 (1) ஆவது பிரிவின்கீழ் பிரசுரிக்கப்படும் அறிவித்தல்*

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 126 (VII) ஊ எனப்படும் உட்பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அச்சட்டத்தின் 122 ஆவது பிரிவில் தொடங்கொட பிரதேச சபைக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள தத்துவத்தின் பிரகாரம் அப்பிரதேச சபையினால் தயாரிக்கப்பட்ட இங்கு கீழே காட்டப்பட்டுள்ள துணைச்சட்டம் 2012.12.21 ஆந் திகதி நடைபெற்ற தொடங்கொட பிரதேச சபை மாதாந்த பொது சபைக் கூட்டத்தில் 06-1-6 ஆம் இலக்க பிரேரணைக்கு உடன்பாடு பெறப்பட்டுள்ளது. 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய மேற்கூறப்பட்ட 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 123 (1) ஆவது பிரிவின் பிரகாரம் அத்துணை விதி மேல் மாகாண மாகாண சபையின் முதலமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல், சட்டம், ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி, மற்றும் மாகாண நிர்வாகம், மின்சக்தி மற்றும் எரிசக்தி மனிதவலு, மற்றும் வேலைவாய்ப்பு பொருளாதார மேம்பாடு தொடர்பான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

பிரசன்ன ரணதுங்க,
முதலமைச்சர் மற்றும் நிதி திட்டமிடல்,
சட்டமும் ஒழுங்கும், காணி, கல்வி உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம்,
மின்சக்தி மற்றும் எரிசக்தி, மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு, வர்த்தக மற்றும்
பொருளாதார மேம்பாட்டு அமைச்சர்,
மேல் மாகாண சபை.

முதலமைச்சர் அலுவலகம் (மேல் மாகாணம்),
"சிராவஸ்தி மந்திரய",
கொழும்பு 07,
2013, செத்தெம்பர் 30.

### தொடங்கொட பிரதேச சபை

### முச்சக்கர வண்டி நிறுத்தி வைத்தல் தொடர்பான துணை விதி வரைவு

1. இத்துணை விதி, தொடங்கொட பிரதேச சபையின் முச்சக்கர வண்டி நிறுத்தி வைத்தல் தொடர்பான துணை விதி என அறிமுகப்படுத்தப்படும்.

2. இத்துணை விதியானது, சபையின் அதிகாரப் பிரிவினுள் முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைத்தல், ஒழுங்குபடுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் நிறுத்தி வைத்தல் இடம் தொடர்பில் கட்டணம் அறவிடுதல் தொடர்பாக விதிக்கப்படுகின்றது.

3. (1) சபையின் அதிகாரப் பிரிவினுள் முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைக்கும் இடத்தில் நிறுத்தி வைக்க வேண்டிய உச்ச முச்சக்கர வண்டிகளின் எண்ணிக்கை சபை பிரேரணை நிறைவேற்றம் மூலம் நிர்ணயிக்கப்பட வேண்டியதுடன், அத்தீர்மானம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து அல்லது அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் நிர்ணயிக்கப்பட்ட திகதியிலிருந்து அமுலுக்கும் வரும்.

3. (2) மேற்படி 3.1 விதியின்படி தீர்மானிக்கப்பட்ட முச்சக்கர வண்டி நிறுத்தி வைக்கும் இடங்கள் மற்றும் எண்ணிக்கை திருத்தப்படவேண்டுமென சபைக்கு தெரியும் பட்சத்தில் சபை தீர்மானம் நிறைவேற்றம் மூலம் அவ்வாறு செய்ய முடியுமென்பதுடன் அது வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து அல்லது அதில் குறிப்பிட்ட நிர்ணயிக்கப்பட்ட திகதியிலிருந்து அமுலுக்கு வரும்.

3. (3) முச்சக்கர வண்டி நிறுத்தி வைக்கும் இடத்தை தீர்மானித்தல், அதன் இடப்பரப்பை தீர்மானித்தல், நிறுத்தக்கூடிய முச்சக்கர வண்டியின் உச்ச எண்ணிக்கையை தீர்மானித்தல் என்பனவற்றின் பொருட்டு அல்லது அத்தகைய தீர்மானங்களை திருத்தும் பொருட்டு சபையானது, முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்களை கொண்ட குழுவொன்றினது பரிந்துரையை சபை மூலம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

*3. (4) மேல் 3 (1) விதியின் பிரகாரம், முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைக்க வேண்டிய இடங்களை இனங்காணும் பொருட்டான அறிவித்தல் பலகை ஒன்றை எல்லா நிறுத்தி வைக்கும் இடத்துக்கு முன்பாக நிறுவுதல் வேண்டுமென்பதுடன் அந்த அறிவித்தல் பலகை தொடர்பான நிறுத்தி வைக்கும் இடத்தின் குறியீட்டு இலக்கத்தை காட்சிப்படுத்தல் வேண்டும்.*

*3. (5) விதிக்கு அமைய நிறுத்தி வைக்கும் இடத்தில் நிறுத்தி வைக்க முடியுமான ஆகக்கூடிய முச்சக்கர வண்டிகளின் எண்ணிக்கை, தொடர்புடைய அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தல் வேண்டும்.*

*3. (6) நிறுத்தி வைக்கும் இடத்தில் முச்சக்கர வண்டி ஒழுங்குமுறையாக நிறுத்தி வைக்கப்பட வேண்டுமென்பதுடன் நிறுத்தி வைக்கப்படவேண்டிய விதத்தை சபையின் அதிகாரமளிக்கப்பெற்ற உத்தியோகத்தர் ஒருவர் ஒழுங்குமுறை அறிவித்தல் செய்யும் விதத்தில் அமைதல் வேண்டும்.*

*4. பிரதேச சபை மூலம் முச்சக்கர வண்டி நிறுத்தி வைக்கும் பொருட்டு இந்த துணைவிதியின் இரண்டாவது அட்டவணையில் குறிப்பிட்ட முறையில் அனுமதிப்பத்திரமொன்று தலைவரினால் வழங்கப்படுதலும், அது தொடர்பாக கட்டணமொன்றை விதித்து அறவிடுதலும் சட்டரீதியானதாகும்.*

*5. முச்சக்கர வண்டி நிறுத்துமிடத்தில் நிறுத்தி வைக்கும் முச்சக்கர வண்டி அனுமதிப் பத்திரம் வழங்கும்போது நிறுத்துமிடத்துக்கு அருகிலுள்ள வதிவாளர்களுக்குச் சொந்தமான முச்சக்கர வண்டிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படல் வேண்டும்.*

*6. (1) மூன்றாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முன்மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைய, தமது நிரந்தர வதிவிடத்துக்கு அருகே முச்சக்கர வண்டிகளை நிறுத்துமிடத்தில் நிறுத்தி வைத்தல் தொடர்பாக பிரதேச சபையில் அனுமதிப்பத்திரம் விண்ணப்பித்தல் வேண்டும் என்பதுடன் அது தொடர்பாக சபை மூலம் தீர்மாக்கப்பட்ட பணத்தை செலுத்தி விண்ணப்பமொன்றை சபையில் பெற்றுக்கொள்ளல் வேண்டும். இவ்விண்ணப்பப்படிவத்துக்கான கட்டணம், சபை மூலம் எடுக்கப்படுகின்ற தீர்மானத்திற்கு ஏற்ப காலத்துக்கு காலம் திருத்தப்பட முடியும்.*

*6. (2) முச்சக்கர வண்டியை ஓட்டுபவர் உரிமையாளர் எனின் அவரினதும், ஓட்டுபவர் வாடகைக்கு அமர்த்தப்பட்ட சாரதி எனின் அவரினதும் உரிமையாளரினதும் கீழ்க்குறிப்பிட்ட ஆவணங்களின் புகைப்படப் பிரதிகள், விண்ணபத்துடன் இணைக்கப்படல் வேண்டும். அவ்விண்ணப்பப் படிவம் மூன்றாவது அட்டவணையில் குறிப்பிட்டவாறு அமைதல் வேண்டும்.*

(I) *முச்சக்கரவண்டி உரிமையாளரின் தேசிய அடையாள அட்டையும் செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரமும் ;*
(II) *முச்சக்கரவண்டியின் பதிவுச் சான்றிதழ் ;*
(III) *வாடகைக்கு அமர்த்தப்பட்ட சாரதியின் தேசிய அடையாள அட்டையும் செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரமும்.*

*6. (3) சபையின் அனுமதிப் பத்திரம் பெற்ற முச்சக்கர வண்டிகள் தொடர்பில் பதிவேடு ஒன்றை பேண வேண்டுமென்பதுடன், அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படுமிடத்து அதுபற்றி குறிப்பிட்டு சிவப்பு மையினால் அடையாளமிடுதல் வேண்டும்.*

*6. (4) சபை மூலம் வருடாந்தம் முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைப்பதற்கான அனுமதிப்பத்திரம் வழங்க முடியும்.*

*6. (5) செல்லுபடியான அனுமதிப் பத்திரத்தின் புகைப்பட பிரதியொன்றை தெளிவாக வெளியே தெரியக்கூடியவாறு முச்சக்கரவண்டியின் முன் கண்ணாடியில் காட்சிக்கு வைக்கப்படவேண்டும்.*

*6. (6) முச்சக்கர வண்டியின் வலப் பக்கம் பயணிகள் ஏறாமல் அல்லது இறங்காமல் இருக்கும் வகையில் மூடப்பட்டிருத்தல் வேண்டும்.*

*6. (7) அனுமதிப் பத்திரம் முச்சக்கரவண்டியின் பதிவு செய்யப்பட்ட உரிமையாளர் பெயருக்கு வழங்கப்படல் வேண்டும்.*

*6. (8) அனுமதிப்பத்திரம் செல்லுபடியான கால எல்லை முடிவடைவதற்கு இருவாரங்களுக்கு முன்னதாக அனுமதிப்பத்திரத்தை புதுப்பித்துக் கொள்ளுதல் முச்சக்கர வண்டியின் உரிமையாளர் மூலம் செய்ய வேண்டும்.*

*6. (9) மேற்படி 6.4 உப பந்திக்கு அமைய வருடாந்தம் விதிக்கப்பட்டு அறவிடவேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டணம் சபையின் மூலம் தீர்மானிக்கப்பட வேண்டியதுடன், அத்தீர்மானம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து அல்லது அதில் குறிப்பிடப்பட்டிருக்கும், நிர்ணயிக்கப்பட்ட திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் அறவிடப்பட வேண்டும்.*

*6. (10) 4 ஆம் துணைவிதியின் நியதிகளின் பிரகாரம், சபையினால் வழங்கப்பட்ட செல்லுபடியான அனுமதிப்பத்திரம் இன்றி, முச்சக்கர வண்டி நிறுத்துமிடத்துக்கு முச்சக்கர வண்டியொன்றை நுழையவைக்கவோ அல்லது அங்கு நிறுத்தி வைக்கவோ கூடாது.*

*6. (11) வழங்கப்பட்டுள்ள செல்லுபடியான அனுமதிப் பத்திரம் இருப்பினும், பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் அல்லது தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் மூலம் தற்காலிகமாக முச்சக்கரவண்டி நிறுத்துமிடத்திலிருந்து முச்சக்கரவண்டியை அகற்றுவதற்கு கட்டளை இடலாம் என்பதுடன் அச்சந்தர்ப்பத்தில் இந்த அனுமதிப் பத்திரம் இதற்கு தடையாக இருக்கக் கூடாது.*

7. நிறுத்துமிடத்துக்கு வேறு வாகனம் உட்பிரவேசிப்பதற்கு அல்லது நிறுத்தி வைக்கவோ கூடாது.

8. நிறுத்துமிடத்துக்கு நுழையும் இடத்துக்கு அல்லது அங்கிருந்து வெளியேறும் இடத்துக்கு தடங்களாகும் வகையில் முச்சக்கர வண்டிகளையோ அல்லது வேறு எந்த வாகனங்களையோ நிறுத்தி வைக்கக்கூடாது.

9. நிறுத்துமிடத்திலிருந்து முச்சக்கர வண்டிகளை அகற்றுவதற்கான செயலுக்கு தொடர்புடைய எந்தவொரு திருத்துதலையும் தவிர நிறுத்துமிடத்திற்குள் வேறெந்த முறையிலும் திருத்துதலைச் செய்யக்கூடாது.

10. ஏதேனும் முச்சக்கர வண்டியொன்றிற்கு அனுமதிப் பத்திரம் ஒன்றை பெற்றுக்கொண்டது, ஏதேனும் நிறுத்துமிடத்திற்கும் அந்த அனுமதிப்பத்திரம் தொடர்புடைய நிறுத்துமிடத்தை தவிர்ந்த வேறு எந்தவொரு இடத்திலும் வாடகைப் பிரயாண நோக்குடன் முச்சக்கர வண்டியை நிறுத்தி வைக்கக் கூடாது.

11. அனுமதிப் பத்திரமுள்ள முச்சகக்கர வண்டிகள் நிறுத்துமிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சாரதிகள், வெளியாட்களை முச்சக்கர வண்டி நிறுத்துமிடத்தில் அழைத்து வெறுமனே திரிவதற்கு அனுமதிக்கக் கூடாது.

12. நிறுத்துமிடத்தில் எவரேனும் ஆள் மூலம், போதைப்பொருள் பாவிக்கவோ அல்லது நெறிமுறையற்ற விதத்தில் நடக்கவோ அல்லது எந்தவொரு செயல்கள் செய்யக்கூடாது என்பதுடன், அத்தகைய செயல்களைச் செய்வதற்கு இடங்கொடுக்காமல் நிறுத்துமிடத்தை பயன்படுத்துவதற்கு அனுமதிபெற்ற நபர்களின் பொறுப்பாகும்.

13. அனுமதிப்பத்திரம் பெற்ற எவரேனும் ஆள், நிறுத்துமிடத்தில் துர்நடத்தையில் ஈடுபட்டதாக பொதுமக்களிடமிருந்து முறைப்பாடு கிடைக்கப்பெறும் பட்சத்தில், அதுபற்றி பரிசோதனை நடாத்தி உறுதிப்படுத்தப்படின் அவரின் அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்யும் அதிகாரத்தை இச்சபை கொண்டிருக்கும்.

14. தலைவர் அல்லது அவரால் குறிப்பிடப்பட்ட வேலை தொடர்பாக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் அல்லது பொலிஸ் உத்தியோகத்தர் கேட்கும் எவ்வேளையிலும் செல்லுபடியான அனுமதிப்பத்திரத்தின் மூலப்பிரதி முச்சக்கர வண்டியின் சாரதி அல்லது உரிமையாளர் மூலம் சமர்ப்பிக்க வேண்டும்.

15. (1) இத்துணை விதியிலுள்ள ஏதேனும் ஏற்பாட்டை மீறுதல் குற்றமொன்றாவதுடன் குறித்த குற்றம் தொடர்பில் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாக்கப்பட்டதன் பிற்பாடு ரூபா எழுநூற்றி ஐம்பதுக்கு மேற்படாத குற்றப்பணத்துக்கு உட்படுதல் வேண்டும். அம்மீறல் குற்றத்தை தொடர்ந்து செய்யும் சந்தர்ப்பத்தில் தகுதிவாய்ந்த நீதிமன்ற அதிகாரமுள்ள நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாக்கப்பட்டதன் பின்பு அல்லது அம்மீறல் குற்றம் மீது கவனத்தைச் செலுத்துமாறு எழுத்துமூல அறிவித்தலொன்றை தலைவரினால் அல்லது குறிப்பிட்ட வேலை தொடர்பாக அவரால் அதிகாரமளிக்கப்பெற்ற உத்தியோகத்தரினால் கையளிக்கப்பட்டதன் பின்பு குறித்த குற்றத்தை மேலும் செய்துகொண்டுபோகும் எல்லா தினங்களுக்கும் ரூபா இருநூற்றி ஐம்பதுக்கு மேற்படாத மேலதிக தண்டப்பண மூலம், தண்டிப்பதற்கு ஆட்படுத்தல் வேண்டும்.

15. (2) மேற்படி 15 (1) ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்ட குற்றப்பணம் சபையின் பொது நிதியத்துக்கு வரவு வைக்கப்படல் வேண்டும்.

16. இத்துணை விதிக்கு முரணாக எது குறிப்பிடப்பட்டாலும், சபையின் பிரேரணை நிறைவேற்றப்பட்டதன் மூலம் இத்துணை விதி திருத்தப்படலாம். அல்லது இதனை வலுவிளக்கச் செய்து புதிய துணைவிதியொன்று வகுக்கப்படலாம் அல்லது மேலதிக துணை விதியொன்று ஆக்கப்படலாம்.

17. பொருள் கோடல்

"சபை" என்பது தொடங்கொடை பிரதேச சபை என்று பொருளாகும்.

"தலைவர்" என்பது தொடங்கொடை பிரதேச சபையின் தலைவர் என்று பொருளாகும்.

"தலைவரினால் தனது ஓர் அலுவலுக்காக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்" என்பது தலைவரினால் அதிகாரமளிக்கப்படுகின்ற பிரதேச சபையின் எவரேனும் உத்தியோகத்தர் என்று பொருளாகும்.

"தலைவரினால் தனது ஓர் அலுவலுக்காக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்" என்பது தலைவரினால் எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்படுகின்ற பிரதேச சபையின் நிரந்தர பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் என்று பொருளாகும்.

"அதிகாரப் பிரிவு" என்பது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட தொடங்கொடை பிரதேச சபையினது அதிகாரப் பிரதேசம் என்று பொருளாகும்.

"முச்சக்கர வண்டி" என்பது வாடகைக்கு விடும் நோக்குடன் நிறுத்தப்பட்டுள்ள முச்சக்கர வண்டி என்று பொருளாகும்.

"வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ள சாரதி" என்பது முச்சக்கரவண்டியை ஓட்டும் உரிமையாளர் அல்லது அவ்வண்டியை ஓட்டுவதற்கென உரிமையாளரினால் அமர்த்தப்பட்ட ஆள்' என்று பொருளாகும்.

"நிறுத்துமிடம்" என்பது தொடங்கொடை பிரதேச சபையினால் பிரேரணை நிறைவேற்றுவதன் மூலம் நிர்ணயிக்கப்பட்ட முச்சக்கரவண்டி நிறுத்துமிடம் என்று பொருளாகும்.

"குறித்துரைக்கப்பட்ட நிறுத்துமிடம்" என்பது தொடங்கொடை பிரதேச சபைத் தலைவரினால் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்ட ஏதேனும் குறிப்பிட்ட நிறுத்துமிடம் என்று பொருளாகும்.

"மாதாந்தம்" என்பது ஒவ்வொரு மாதத்தின் ஆரம்பத்தில் முதலாம் திகதியிலிருந்து அந்தந்த மாதத்துக்குரிய 28 அல்லது 29 அல்லது 30 அல்லது 31 நாள்களைக் கொண்ட மாதம் என்று பொருளாகும்.

"மூன்றுமாத" என்பது மாதாந்தம் என்பதில் வரையறுக்கப்பட்ட நாள்களின் எண்ணிக்கை சனவரி 1 இலிருந்து ஆரம்பமாகி அடுத்தடுத்து மூன்று (3) மாதங்கள் வீதம் திசெம்பர் 31 வரை என்று பொருளாகும்.

"வருடாந்தம்" என்பது வருடத்தின் சனவரி 1 ஆந் திகதியில் ஆரம்பித்து திசெம்பர் 31 வரை முடிவடையும் பஞ்சாங்க ஆண்டு என்று பொருளாகும்.

"பொலிஸ் உத்தியோகத்தர்" என்பது 53 ஆம் அத்தியாயத்தில் 1865 இன் 16 ஆம் இலக்க பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 53) 104 ஆம் பிரிவினால் வழங்கப்பட்டுள்ள அதே பொருளாகும்.

"வேறு வாகனங்கள்" என்பது மோட்டார் வாகன கட்டளைச் சட்டத்தினால் அதற்கு வழங்கப்பட்டுள்ள அதே பொருளாகும்.

"பதிவு செய்யப்பட்ட உரிமையாளர்" என்பது மோட்டார் வாகன கட்டளைச் சட்டத்தினால் அதற்கு வழங்கப்பட்டுள்ள அதே பொருளாகும்.

"குற்றச் செயல்" என்பது தொல்லைக் கட்டளைச் சட்டத்தில் அதற்கு வழங்கப்பட்டுள்ள அதே பொருளாகும்.

18. இத்துணை விதியின் சிங்கள, தமிழ் வசனங்களுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழி வசனங்களே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**முதலாவது அட்டவணை**

*3.3 ஆம் துணை விதி*

நியமிக்கப்படுகின்ற வீதிக்குழு, பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும் :-

1. குழுவின் தலைவர் பிரதேச சபையின் தலைவர் ஆதல் வேண்டுமென்பதுடன் செயலாளர் சபையின் வருமான பரிசோதகர் ஆவார்.
2. பிரதேச சபையின் செயலாளரும் தொழில்நுட்ப உத்தியோகத்தரும்.
3. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மூலம் பொறியியலாளர் அல்லது அவர் மூலம் பெயர் குறித்துரைக்கும் பிரதிநிதி ஒருவர்.
4. மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் அல்லது அவர் பெயர் குறித்துரைக்கும் பிரதிநிதி ஒருவர்.
5. களுத்துறை பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவர் அல்லது அவர் பெயர் குறித்துரைக்கும் பிரதிநிதி ஒருவர்.
6. களுத்துறை பஸ் கம்பனி லிமிட்டட்டின் தலைவர் அல்லது அவர் பெயர் குறித்துரைக்கும் பிரதிநிதி ஒருவர்.
7. சபையின் அதிகாரப் பிரிவுக்குட்பட்ட பொலிஸ் நிலையத்திலுள்ள வாகனப் போக்குவரத்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அல்லது அவர் பெயர் குறித்துரைக்கும் பிரதிநிதி ஒருவர்.
8. சபையின் அதிகாரப் பிரிவினுள் உள்ள முச்சக்கரவண்டி சங்கங்களின் ஒவ்வொரு பிரதிநிதி.

***இரண்டாம் அட்டவணை***

*4 ஆம் துணை விதி*




*13 செ. மீ. விட்டமுடைய வட்டமாகும்.*
*உள்வட்டம் நீல நிறமும் வெளிமட்டம் மஞ்சள் நிறமும் கொண்ட பிரதேச சபை இலச்சினை கொண்ட மாதிரியிலுள்ள விடயங்கள் அடங்கிய ஸ்ரீக்கர் ஒன்றாகும்.*

***மூன்றாவது அட்டவணை***

*6 (2) ஆம் துணை விதி*

**முச்சக்கரவண்டி நிறுத்துமிட அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவம்**

*01. (1) விண்ணப்பகாரரின் பெயர் :----.*
*(2) நிரந்தர வதிவிட முகவரி :----.*
*(3) மதிப்பீட்டு வரி இலக்கம் :----.*
*(4) நிரந்தர வதிவிடத்துக்குரிய உள்ளூராட்சி நிறுவனம் :----.*

02. (1) முச்சக்கர வண்டி பதிவு இலக்கம் :----.
(2) ஓட்டுபவர் உரிமையாளரா அல்லது வாடகைக்கு அமர்த்தப்பட்ட சாரதியா என்பது பற்றி :----.
(அ) உரிமையாளர் எனின், செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திர இலக்கம் :----.
(ஆ) வாடகைக்கு அமர்த்தப்பட்டவர் எனின்,
(அ) சாரதியின் பெயர் :----.
(ஆ) நிரந்தர வதிவிட முகவரி :----.
(இ) தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
(ஈ) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திர இலக்கம் :----.

03. அனுமதிப்பத்திரத்திற்காக விண்ணப்பிக்கும் முச்சக்கர வண்டி நிறுத்துமிடம் :-

04. அனுமதிப்பத்திரம் விண்ணப்ப காலம் :- ஒரு மாதத்துக்கு/3 மாதங்களுக்கு/ஒரு வருடத்துக்கு

என்னால் மேல்குறிப்பிடப்பட்ட தகவல்கள் சரியானவை எனவும், ஏதேனும் காரணத்தினால் அத்தகவல்கள் பொய்யானவை என உறுதிப்படுத்தப்பட்டால் எனது முச்சக்கர வண்டி நிறுத்துமிட அனுமதிப்பத்திரம் முன்னறிவித்தல் ஏதுமின்றி இரத்துச் செய்யப்படுவதற்கு உட்படுவதுடன் பிரதேச சபையினால் விதிக்கப்பட்டுள்ள முச்சக்கர வண்டியை நிறுத்துதல் தொடர்பான துணை விதியில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை பின்பற்றுவதற்கு இணங்குகின்றேன்.

----,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :----.

திரு./திருமதி ............................ அவர்களுக்கு .......................................... இலக்கமுடைய முச்சக்கர வண்டியை ............................. கொண்ட நிறுத்துமிடத்தில் நிறுத்துவதற்கான அனுமதிப்பத்திரத்தை ........................................... காலப்பகுதிக்கு வழங்க அங்கீகாரம் வழங்குகின்றேன்.

----,
தலைவர்,
தொடங்கொடை பிரதேச சபை.

திகதி :----.

8-544

---

## அறிவித்தல்

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (ஒப்புமையுள்ள விதிமுறைகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆவது உப பிரிவின் (அ) பகுதியுடன் இணைவாக வாசித்தறியப்பட வேண்டிய, 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனங்களின் (அங்கீகரிக்கப்பட்ட துணைச் சட்டங்கள்) சட்டத்தின் 2 ஆம் பகுதியின் கீழ் ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், அமைச்சர் அவர்களால் தயாரிக்கப்பட்ட மற்றும் 2010.10.05 ஆந் திகதிய 1778/45 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (IV) (அ) ஆவது பிரிவில் பிரசுரிக்கப்பட்ட ஊவா மாகாணத்தின் உள்ளூராட்சி நிறுவனங்களுக்குரிய திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொடர்பில் தயாரிக்கப்பட்ட வரைவின் துணைச்சட்டமானது ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் மூலம் 2013.04.04 ஆந் திகதி நடைபெற்ற மாகாண சபைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டதென இதனூடாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எல். எல். அனில் விஜேசிரி,
செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

உள்ளூராட்சி அமைச்சு.
பதுளை,
2013.07.29.

8-603/1

**அறிவித்தல்**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (ஒப்புமையுள்ள விதிமுறைகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆவது உப பிரிவின் (அ) பகுதியுடன் இணைவாக வாசித்தறியப்பட வேண்டிய, 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனங்களின் (அங்கீகரிக்கப்பட்ட துணைச் சட்டங்கள்) சட்டத்தின் 2 ஆம் பகுதியின் கீழ் ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், அமைச்சர் அவர்களால் தயாரிக்கப்பட்ட மற்றும் 2010.11.02 ஆந் திகதிய 1778/4 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (IV) (அ) ஆவது பிரிவில் பிரசுரிக்கப்பட்ட ஊவா மாகாணத்தின் உள்ளூராட்சி நிறுவனங்களுக்குரிய நுளம்புகள் மற்றும் நோய்க்கிருமிகளை அழித்தல் தொடர்பில் தயாரிக்கப்பட்ட வரைவின் துணைச்சட்டமானது ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் மூலம் 2013.04.04 ஆந் திகதி நடைபெற்ற மாகாண சபைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டதென இதனூடாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*எல். எல். அனில் விஜேசிரி,*
*செயலாளர்,*
*உள்ளூராட்சி அமைச்சு.*

*உள்ளூராட்சி அமைச்சு,*
*பதுளை,*
*2013.07.29.*

*8-603/2*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.